**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**அசல் வழக்கு எண். 83/2021**

PW1 – திரு. சாதிக்அலி நாள். 18.07.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது தந்தை ஏஎம் ஹனிபா என்கிற முகமது ஹனிபாவின் மூத்த மனைவி பெயர் என்னவென்றால் செய்தூண் ஆகும். முதல் மனைவிற்கு ஹபீப் ரகுமான் என்கிற வாரிசு உள்ளது என்றால் சரிதான். எனது தந்தைக்கும் முதல் மனைவி செய்தூண் என்பவருக்கும் விவாகரத்து நடைபெற்றதாக சொல்லியுள்ளேன் என்றும் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை மேற்படி விவாகரத்தானது 1968 ம் ஆண்டு இஸ்லாமிய முறைப்படி ஜமாத் முன்னிலையில் நடைபெற்றதால் ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. மேற்படி ஜமாத் முன்னிலையில் நடந்திருந்தாலும் ஆவணம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

2. நானும் 1 முதல் 7 பிரதிவாதிகளும் தாவா சொத்தை சேர்த்துதான் பாகப்பிரிவினை செய்து கொண்டோமா என்றால் 2015 ம் ஆண்டு நடந்த பாகப்பிரிவினையில் தாவா சொத்தை தவிர இதர ஜிஆர் மனை சொத்துக்களை பாகம் செய்து கொண்டோம் தாவா சொத்தில் விவசாயம் செய்வதால் அதை பொதுவாக வைத்து அனுபவம் செய்து வருகிறோம். நாங்கள் 2015 ம் ஆண்டு தாவாசொத்தை தவிர இதர சொத்துக்களுக்கும் பாகப்பிரிவினை செய்தபோது

அதில் விவசாய சொத்துக்களும் உட்பட்டு இருந்தது என்றால் சரியல்ல தாவா சொத்து மட்டுமே விவசாய சொத்து ஆகும். 2015 ல் செய்யப்பட்ட பாகப்பிரிவினை சொத்துக்களில் இதர சொத்துக்களும் விவசாய சொத்துக்களும் உள்ளடங்கியது வழக்கிற்காக விவசாய சொத்துக்கள் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. 2015 ம் ஆண்டு நடைபெற்ற பாகப்பிரிவினையில் எனது தந்தையின் முதல் மனைவி மற்றும் அரவது மகன் ஹபீப் ரகுமான் ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்கப்பட்டிருந்ததா என்றால் சேர்க்கப்படவில்லை ஏனென்றால் எனது தந்தையின் முதல் மனைவி விவாகரத்து பெற்று வேறு ஒரு திருமணம் செய்து கொண்டதாலும் மேற்படி ஹபீப் ரகுமான் 2002 ம் வருடம் பொது குடும்ப சொத்துக்கள் தொடர்பாக பாகவிடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்த படியாலும் மேற்படி நபர்களை சேர்க்கவில்லை. மேற்படி முதல் மனைவிக்கு விவாகரத்து நடந்து வேறு ஒரு திருமணம் செய்து கொண்ட விவரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. எனது தந்தையின் சகோதரரான செய்யது முகமது மற்றும் மேற்படி ஹபீப் ரகுமான் ஆகியோர்கள் எழுதிக் கொடுத்த பாகவிடுதலை பத்திரத்தின் அசலை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் எனது தந்தை அவரது சகோதரரான செய்யது முகமதுவிற்கு 25 செண்ட் நிலத்தை வாய்மொழியாக கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும் அது எப்போது தாவா சொத்தில், எந்த பகுதியை கொடுத்தார் என்று பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தில் 1 ம் பிரதிவாதிக்கும் 3 ம் பிரதிவாதிக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். மேற்படி 1 மற்றும் 3 பிரதிவாதிகள் அவரது பாகத்தை பொறுத்து தாவா சொத்தை கிரையம் கொடுக்கலாம் என்றால் சரிதான் ஆனால் அவர்களுக்கான உரிமையை மீறி 8 ம் பிரதிவாதிக்கு கிரையம்

கொடுத்துவிட்டனர்.

5. மேற்படி 8ம் பிரதிவாதிக்கு 1 மற்றும் 3 பிரதிவாதிகளால் கொடுக்கப்பட்ட கிரைய பத்திரத்திரமானது 1 மற்றும் 3 பிரதிவாதிகளின் உரிமையயை பொறுத்தவைர மட்டும் செல்லக்கூடியது என்றால் சரிதான். எனது தந்தைக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமணத்தை நிரூபிக்கும் வகையில் ஏதேனும் ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஏனென்றால் மேற்படி திருமணமானது இஸ்லாமிய முறைப்படி நடைபெற்றது எந்தவொரு ஆவணமும் ஏற்படுத்தப்படவில்லை. 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் எனக்கும் தாவா சொத்தை பொறுத்தவரை எந்தவொரு பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல பாத்தியம் உள்ளது.

6. 8ம் பிரதிவாதியும் எனது தந்தையும் நண்பர்கள் என்பதற்கு ஏதேனும் சாட்சியம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. எனது தந்தை உயிருடன் இருக்கும் காலத்திலேயே 8ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் அளிப்பதாக கொடுத்த உறுதி மொழியின் அடிப்படையில் தான் அவர் இறந்த பிறகு 1, 3 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. 1 மற்றும் 3 பிரதிவாதிகள் 8ம் பிரதிவாதிக்கு 2004ம் ஆண்டு தாவா சொத்தை கிரையம் கொடுத்துவிட்டதால் இவ்வழக்கானது காலதாமத தோஷத்திற்காக பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2004ல் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணத்தை அதிலிருந்து 3 வருடங்களுக்குள் செல்லத்தக்கது இல்லை என வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும் இவ்வழக்கானது காலதாமத தோஷத்திற்காக தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல 2020ல் தான் மேற்படி கிரையம் பற்றி 8ம் பிரதிவாதி மூலம் தெரியவந்தது. மேற்படி 2004ல் ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரத்தை பற்றி 2004ம் ஆண்டே எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக 2020ல் 8 ம்பிரதிவாதி மூலம் தெரியவந்தது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. 28.02.2002, 04.09.2002 ம் தேதி செய்யது முகமது மற்றும் ஹபீப் ரகுமான் ஆகியோர்கள் எழுதிக் கொடுத்த விடுதலை பத்திரமானது அவர்களுக்கு பொது சொத்தில் உரிமை இல்லாததால் செல்லக்கூடியது இல்லை என்று சொன்னால் 04.09.2002 ம் தேதி அன்று மேற்படி பாகவிடுதலை எழுதிக் கொடுக்கவில்லை 28.02.2002 அன்று தான் எழுதிக் கொடுக்கப்பட்டது மேற்படி பாகவிடுதலை பத்திரம் செல்லக்கூடியது ஆகும். 8 ம் பிரதிவாதியை மோசடி செய்யும் எண்ணத்தில் தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல அவர்தான் என்னுடைய சொத்தையும் சேர்த்து கிரையம் வாங்கி மோசடி செய்துள்ளார்.

8. தாவா சொத்திற்கும் எனக்கும் எந்தவொரு பாத்தியமும் இல்லாததால் தான் குடும்ப சொத்துக்களை பாகப்பிரிவினை செய்யுப்போது தாவா சொத்துக்களை சேர்த்து பாகப்பிரிவினை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் கேட்ககூடிய பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது இல்லை என்றும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை.